67

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ருத்ரோத்காரிஸு பைங்குனிமீ பகுதி ௩.

Vol. I. March & April 1924. No. 3.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

ஆழ்வார் தொடங்கி எம்பெருமானார் நடுவாக மணவாள மாமுனிகள் முடிவாகவுள்ள ஆசார்யபரம்பரையில் ஸம்ப்ரதாய பரம்பரா ப்ராப்தங்களான அர்த்த விசேஷ நிர்ணயமானது (க) நிரதிசய புருஷார்த்த ப்ராப்திக்குறுப்பாகையாலே; அவர்களால், சுருக்கியும் விரித்தும், அருளிச்செய்யப்பட்ட, அர்த்த விசேஷங்கள் எளிதில் அறியும்பொருட்டு, அவ்வவ் விடங்களிலுள்ளவைகளைக்கொண்டு மிகச் சுருக்கமும், விரிவுமின்றிக்கே இங்கு நிரூபிக்கப்படுகின்றன.

அதில் "மாநாதீநா மேயஸித்தி:" என்கிறபடி ப்ரமாணத்தைக் கொண்டே பிரமேயம் சித்திக்கவேண்டியிருப்பதால், முதலில் பிரமாணத்தை நிரூபித்துக்கொண்டு பின்பு பிரமேயங்களான அர்த்த விசேஷங்களை நிரூபிக்கவேண்டியது அடைவாகையாலே, இப் பிரபந்தம் பிரமாண பரிச்சேதமென்றும், பிரமேய பரிச்சேதமென்றும், இரண்டு பாகமாயிருக்கும்.

அவற்றுள் பிரமாணங்களாவன— பிரமேயங்களை உள்ளபடி அறிகைக்குச் சாதனங்களான பிரத்யக்ஷமும், அநுமானமும், சப்தமுமாம். அவற்றுள் பிரத்யக்ஷப் பிரமாணமாவது— ரூப ரஸ கந்த ஸ்பரிஸ சப்தங்களையும், இவைகளுக்கு ஆதாரங்களான திரவியங்களையும், உள்ளுறையான சுக துக்கங்களையும், அறிதற்குச் சாதனங்களான கண் முதலான ஐந்து இந்திரியங்களும், மனஸ்ஸுமாகிற ஆறு இந்திரியங்களுமாம். அநுமானப் பிரமாணமாவது—பிரத்யக்ஷத்தால் அறியப்படும் வஸ்துக்களுடைய ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமலிருக்கிற நிலைமையைக்கொண்டு ஒன்றாலே, ஒன்றை அறி

(க) நிரதிசயம்—ஒப்பற்றது. புருஷார்த்தம்—புருஷனால் விரும்பப்படுவது.

கைக்குறுப்பான தர்க்கமென்று சொல்லப்படுகிற யுக்தி விசேஷம். அஃதாவது—அறியப்பட்ட தொன்றைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டாததென் றறிந்ததொன்றை அறியாதவிடத்தும் அவ்வறியப் பட்டதைக்கொண்டறியும் யுக்தி விசேஷம் என்றபடி. சப்தப் பிரமாணமாவது—பிரத்யக்ஷத்தால் அறியமுடியாத வஸ்துக்களை உள்ளபடி அறிகைக்குச் சாதனமான அக்ஷரராசி ரூபமான சப்தம்.

அந்த சப்தம் நாலுவகையாயுள்ள வேதங்களும், அவைகளின் அர்த்தத்தை உள்ளபடி தெரிவித்தற்குச் சாதனங்களான மீமாம்ஸை முதலான அங்கங்களும், அந்த வேதங்களுடைய அர்த்தத்தை விஸ்தரித்துச் சொல்லியும், அந்த அர்த்தங்களுக்கு விரோதமில்லா மல், அதற்கு (உ) உபயுக்தமான அர்த்தங்களைச்சொல்லியும் போருகிற மநுஸ்மிருதி முதலான தர்ம சாஸ்திரங்களும், இதிஹாஸ புராணங்களும், பாஞ்சராத்திரமும், மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளும், அவைகளை அநுஸரித்த பூர்வாசார்யர்களுடைய ஸூக்திகளுமாம்.

அவைகளில் வேதமானது-ஒருபுருஷனுற் சொல்லப்படாமை யாலே (ந) பிரமம் வஞ்சனை (ச) அநவதாநம், ஆகிய இவைகளால் உண்டாகுந் தோஷம், அதற்கு இல்லையாம். மற்றும் அவ் வேத மானது ஒரு வஸ்துவைத் தெரிவிக்கும் விஷயத்தில் மற்றொன்றை அபேக்ஷியாமலிருக்கும்படியான பெருமையும், நித்யமாயிருக்கை யும் உடையது. ஆனல், ஸித்தாந்தத்தில் சப்தம் அஹங்கார மென்கிற தத்துவத்தினுடைய காரியமாயிருப்பதால், நித்யமென்று சொல்லும்படி எங்ஙனே என்னில்? சப்தம் அநித்யமாயிருந்த போதிலும், கல்பங்கள்தோறும், (ச) ஆநுபூர்வி வேறுபட்டிராமல், ஒரே ஆநுபூர்வியாக உச்சரிக்கப்படுவதைப்பற்றி நித்யமென்றே சொல்லப்படும்.

மற்ற இதிஹாஸ புராணங்களுக்கு வேதத்தை அநுஸரித்தே பிராமாண்யம் ஏற்படுவதால் வேதவிரோதமான அர்த்தங்களைச் சொல்லுமிடத்து அவை பிரமாணமாகமாட்டா.

(உ) உபயுக்தம்-உபயோகப்படுவது (ந) பிரமம்-மயக்கம் (ச) அநவ தாநம்-கவனமின்மை (ச) ஆநுபூர்வி-முன்னுள்ளதைப் பின்னுள்ளது ஒட்டியிருப்பது. அஃதாவது-வேதாக்ஷரக் கூட்டங்களின் கிரமமான தொடர்பு.

பாஞ்சராத்ரம், ஸர்வஜ்ஞனாய் சேதனர்களுடைய உஜ்ஜீவனத்தில் ப்ரவர்த்தனாயிருக்கிற ஸர்வேசுவரனால் அருளிச்செய்யப்பட்டதாகையால், வேதம்போல் தன்னுடைய ப்ராமாண்யத்தில் மற்றொன்றை அபேக்ஷியாமலிருப்பதால் வேத (ஞ) துல்யம். அப்படியே மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளும் வேததுல்யங்களாம்.

அன்றிக்கே வேதம்போல் ஆநுபூர்வி வேறுபடாமல் "என் முன் சொல்லும் மூவுருவாமுதல்வனே" என்றும், "திருநாமச் சொற்கற்றனமே" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேசுவரன் ஆழ்வாருக்கு உபதேசிக்க ஆழ்வார் மதுரகவிகளுக்கு உபதேசிக்க இப்படி நாதமுனிகள் முதலாக பரம்பரையாக வருகிறபடியால் நம்மாழ்வார் அருளிச்செய்த நாலு பிரபந்தங்களும் நாலு வேதங்களாகவும் மற்ற ஆழ்வார்களுடைய திவ்ய சூக்திகள் அவைகளுக்கு அங்கங்களாயும் உபாங்கங்களாயும் உள்ளன என்பது சில ஆசார்யர்களுடைய அபிப்பிராயம்.

இனி வேதம் கருமபாகமென்றும் ப்ருஹ்மபாகமென்றும் இரண்டு வகையாயிருக்கும். அவற்றுள் கரும பாகம் ஆராத்யனான ஸர்வேசுவரனுடைய ஆராதனங்களான யஜ்ஞம் முதலான கர்மாக்களையும், அவைகளுடைய அநுஷ்டானப் பிரகாரத்தையும், விளக்கமாய்ச் சொல்லும். இதற்கு உபப்ருஹ்மணங்கள் (வழிநூல்கள்) மநுஸ்மிருதி முதலான தர்மசாஸ்திரங்களாம். ப்ருஹ்மபாகம் ஆராத்யனான ஸர்வேசுவரனுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளையும் அவனை யடைவதற்குரிய உபாயத்தையும் அதனுடைய பலத்தையும் நேராகப் பிரதிபாதிக்கும். இதற்கு வழிநூல்கள் ஸ்ரீ ராமாயண பாரதங்களான இதிஹாசங்களும் விஷ்ணுபுராணம் முதலான ஸாத்வீக புராணங்களுமாம்.

இதில் பூருவபாகத்தின் வழிநூல்களான தரும சாஸ்திரங்களில் ஆராதனமான கர்மாவினுடைய நிரூபணத்தில் ஆராத்யனான ஈசுவரனுடைய ஸ்வரூபநிரூபணத்தின் ஆராதனமான கர்மாவினுடைய நிரூபணமும் இன்றியமையாததாய் ஏற்பட்டிருக்கும்.

அந்த இரண்டு நிரூபணங்களும் மிகவும் உபயுக்தங்களாகையால், இரண்டுவிதமான வழிநூல்களும் இரண்டுவித நிரூபணங்

(ஞ) துல்யம்-ஸமம்.

களிலும் அவைகளுக்காகவே ப்ரவிருத்தங்களாகையால் ஈசுவர ஸ்வரூப நிரூபணத்தில் தர்ம சாஸ்திரங்களும், கர்ம நிரூபணத்தில் இதிஹாஸ புராணங்களும், (சு) அக்ய பரங்களன்று. ஆதலால் ஈசுவர ஸ்வரூப நிரூபணத்தில் தர்மசாஸ்திரம் இதிஹாஸ புராணத்தைக் காட்டிலும் துர்ப்பலமென்றும், அப்படியே ஆசார நிரூபணத்தில் தர்மசாஸ்திரத்தைக் காட்டிலும் புராணம் துர்ப்பலமென்றும், சொல்லுவது ப்ரமாணத்துக்கு ஒத்ததன்று. இந்த விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் இரண்டாவது அத்தியாயத்தில் ஸ்மிருத்யதிகரணத்தில் விளக்கமாகக் காணலாம்.

இந்த விஷயத்தைத் தர்மசாஸ்திர நிபந்தன காரரான வைதிக சார்வபௌமர் "தசநிர்ணயி" என்கிற க்ரந்தத்தில் ஸ்ரீஜயந்தி நிர்ணயத்தில் விவரித்து நிரூபித்திருக்கிறார். இதுநிற்க, "சாஸ்திரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச்சலநகாரணம்—உபதேசாத்தரிம் புத்வா விரமேத் ஸர்வகர்மஸு" என்கிற சுலோகத்தின்படி உபதேச சாஸ்திரமும் பிரமாணம். உபதேச சாஸ்திரமாவது—ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட ரஹஸ்யத்ரய சாஸ்திரம். இந்த விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் லகு ஸித்தாந்த சுருதப்ரகாசிகையில் விளக்கமாம். இவ் விஷயம் பிரமேய பரிச்சேதத்தில் விவரிக்கும்படியாயிருக்கும். இந்த உபதேச சாஸ்திரார்த்த விசார ரூபங்களான ஸூத்திரங்களாகவே "ஸ்ரீ வசனபூஷணமும், "ரஹஸ்யத்ரயமும்," லோக தேசிகனால், அருளிச்செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கு விருத்தி க்ரந்தம் மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யானங்களாம் இந்த ஸூத்திரங்களுக்குப் பாஷ்யங்களாக குன்னத்தூர் ஐயன், சுத்த ஸத்வம் எம்பாவையங்கார், என்கிற இவ்விருவரும், "ஸ்ரீ வசனபூஷண மீமாம்ஸா பாஷ்யம்" என்றும், "ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம்" என்றும், இரண்டு பாஷ்யங்கள் முறையே அருளிச்செய்திருக்கிறார்கள்.

இந்த அர்த்த விசேஷங்கள் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரராலே சுருக்கமாய் அருளிச்செய்யப்பட்டன. இவை பிரமேய பரிச்சேதத்தில் நிரூபிக்கும்படியாயிருக்கும். இவ்வர்த்த விசேஷங்கள் "சரமசுலோக சந்திரிகை" யிலும், "சரமசுலோகடிப்பணி" யிலும் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி எம்பார் ஜீயர் ஸ்வாமி ஸாதித்த க்ரந்தங்களிலும், விஸ்தரிக்கப்பட்டன.

(சு) அக்ய பரங்களன்று-அமுக்யங்களன்று.

அப்படியே "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாச்ச" என்கிற படியே சிஷ்டாசாரமும் பிரமாணம். "தர்மஜ்ஞஸமயப் பிரமாண" மென்று முந்திச் சொல்லப்பட்டிருப்பதால், சிஷ்டாசாரம் முக்ய பிரமாணம். சிஷ்டர்களாகிறார் பகவத் கடாக்ஷ விசேஷத்தால் அடையப்பெற்ற திவ்ய ஜ்ஞானத்தை யுடையவர்களான ஆழ்வார்கள். இந்த விஷயத்தை "சொல்லும் விடுசுருதியாம்" என்று ஞான சாரத்தில் அருளாளப் பெருமாளெம்பெருமானார் ஸூசிப்பித்திருக் கிறார். அப்படியே திருப்பாவையில் "மாலேமணிவண்ணா" என் கிற பாட்டில் மேலையார் செய்வனகள் என்கிற வாக்யத்தினுடைய வ்யாக்யானவஸரத்தில், அழகியமணவாளப்பெருமாள்நயினார் வியக்தமாக அருளிச் செய்திருக்கிறார். நிற்க, மீமாம்ஸையில் சுருதிஸ்மிருதி விருத்தமான சிஷ்டாசாரம் பிரமாணமன்றென்று சொல்லியிருப்பது; ஸாக்ஷாத் பகவத் தத்வர்களான ஆழ்வார்களைத் தவிர கேவல ஸ்மர்த்தாக்களான சிஷ்டர்களுடைய ஆசாரவிஷயம்.

இனி இராமாநுஜ நூற்றந்தாதி, திவ்யப்பிரபந்தங்களின் எண்ணிக்கையிற் சேராமல், திவ்யப்பிரபந்தங்களுக்குண்டான பெருமையைப் பெற்றது என்கிற விஷயம் நிரூபிக்கப்படும்.

ஆழ்வார்கள் அருளிச்செயல்களான திவ்யப் பிரபந்தங்கள் ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு பிரசாரம் இல்லாமல் லோபத்தை யடைய, பின்பு நாதமுனிகள் காலத்தில் நாதமுனிகளுக்கு ஆழ் வார் நாலாயிரத்தையு மருளிச்செய்ததாகக் குருபரம்பராப்ர பாவத்திலிருக்கிறது. அப்போது இராமாநுஜ நூற்றந்தாதி இல் லாமையாலும் அவ்வாறில்லாதிருக்கினும், ஆழ்வார் இனி ஏற்படும், இந்தப் பிரபந்தத்தையும், ஸாக்ஷாத்கரித்து அருளிச்செய்தார் என்ப தற்குப் பிரமாணமில்லாமையாலும், நாதனுக்கு நாலாயிரமும் உபதேசித்தபிறகு பூர்வர்களுக்கு இராமாநுஜ நூற்றந்தாதியும் உபதேசமாகவே வந்ததாகப் பிரமாணமில்லாமையாலும், "வேதத் துக்கு ஓமென்னுமதுபோல்" என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடி "கண்ணிநுண் சிறுத்தாம்பு"க்கு முந்தியுள்ள பிரபந்தங்கள் ப்ரணவார்த்த விவரணமாயும், நம: சப்தத்துக்கு முக்யார்த்தமான பாகவத சேஷத்வத்தை ப்ரதிபாதிக்கிறபடியால் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" நம: சப்தார்த்த விவரணமாயும், "திருவாய்மொழி" மந்த்ரசேஷத்தினுடைய விவரண மாயும், "இயற்பா" சரமசுலோகார்த்த விவரணமாயும், இருக்கும்

படியை அழகியமணவாளப்பெருமாள்நாயனார் "ஆசார்யஹ்ருதயத்" தில் நிர்வஹித்தபடியை அநுஸரித்து, "உபதேசரத்தின மாலை" யில் "வாய்த்ததிருமந்திரத்தின்மத்திம மாம்பதம்போல்" என்று தொடங்கி "அருளிச்செயல் நடுவே சேர்வித்தார் தாற்பரியந் தேர்ந்து" என்று "கண்ணி நுண் சிறுத்தாம்பை" த் திவ்யப்பிரபந்தங்களிற் சேர்த்து அருளிச் செய்ததுபோல் "இராமாநுஜ நூற்றந்தாதியை" த் திவ்யப் பிரபந்தங்களிற் சேர்த்து அருளிச் செய்யாமையாலும், அப்படி நாலாயிரத்திற் சேர்த்துக்கொள்வதா யிருந்தால் பாகவத சேஷத்வஞ் சொல்லப்பட்ட இப்பிரபந்தத்தைக் "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்ற பிரபந்தத்தோடு சேர்த்து அநுஸந்திக்க வேண்டி வருகையாலும், ஸம்ப்ரதாயம் அவ்வாறில்லாமல், பிரபந்தாந்தத்தில் ஸேவித்து வருகிறபடியாலும், இதை அநுஸரித்து மணவாளமாமுனிகளுடைய அஷ்டதிக்கஜங்களில் ஒருவராகிய அப்பிள்ளை "திருவெழுகூற்றிருக்கை" "சிறிய திருமடல்" "பெரிய திருமடல்" என்கிற இப் பிரபந்தங்களை இருநூற்றிருபத்தேழு பாட்டுகளாகக் கணக்கு ஏற்படுத்தி, "இராமாநுஜ நூற்றந்தாதி" யைச் சேர்க்காமல் நாலாயிரமென்கிற எண்ணைப் பூர்த்திசெய்திருப்பதாலும், இராமாநுஜ நூற்றந்தாதி," நாலாயிரமென்னுந் தொகையை நிரப்பவேண்டி நாலாயிரத்திற் சேர்ந்ததன்று.

ஆகிலும் கோயிலில் பெரியதிருநாள் ஸப்தாவரணோத்ஸவத்தில் நம் பெருமாள் உடையவரைக் கோஷ்டிக்கு எழுந்தருளாமலிருக்க நியமித்து உடையவர்விஷயமான இப் பிரபந்தத்தைத் தாம் திருச்செவிசாத்தி அருளி அன்றுமுதல் திவ்யப் பிரபந்தங்களுக்குச் சமமாக இதை ஸேவித்துவரும்படி நியமித்தபடியால், "திருப்பல்லாண்டு" க்கு முந்தி இப் பிரபந்தத்தையும், சாற்றுமுறை செய்கிறதும், திவ்யப் பிரபந்தங்களை அத்யயநம் பண்ணக்கூடாத அநத்யயநகாலங்களில் இப் பிரபந்தத்தையும் அத்யயநம் பண்ணுமலிருக்கையுமாகிற திவ்யப் பிரபந்தங்களுக்குண்டான இந்தகௌரவத்தை இதற்கும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவ் விஷயம், "கோயிலொழுகு" முதலான பிரபந்தங்களில் தெளிவாகக் காணலாம்.

இதில் "திருவெழு கூற்றிருக்கை" "சிறிய திருமடல்" "பெரிய திருமடல்" என்ற மூன்றும் ஒவ்வொரு பிரபந்தமும் ஒவ்வொரு பாட்டாகக் கொள்ளவேண்டியது தமிழ்முறைக்குச் சேர்ந்ததேயாகிலும்; "திருமடல்களில் இரண்டடிகளை ஒரு

கண்ணியாகக்கொண்டு மூன்று பிரபந்தங்களிலும், 227 பாசுரமாகக் கொள்ளுமளவில் நாலாயிரமென்கிற தொகை பூர்த்தியாகிற ஔசித்யத்தைக்கொண்டு அப்பிள்ளை கீழ்ச்சொன்ன பிரகாரம்கணக்கிட்டதாகத் தெரிகிறது.

ஆயிரக்கணக்கான தொகைகளில் சற்றேறக்குறைய விருந்தாலும், அவைகளை அவ் வாயிரக்கணக்கால் வழங்குவதும் உசிதமேயாம். இதனை, இதிஹாஸ புராணாதிகளுக்கும் பகவத் விஷய முதலான வியாக்கியானங்களுக்கும் சொல்லும் கிருந்த ஸங்கியைகளைக் கணக்கிட்டும் காணலாம்.

உபயவேதாந்த வித்வான், சிங்கராசார்யர்,
காரப்பங்காடு.

ஸ்ரீ:

வேதாந்ததத்வவிளக்க வினுவிடை.

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)

வினு:- இவைகளை எதைக் கொண்டறியவேண்டும்?

விடை:- "மாநாதீநா மேயஸித்தி:" என்கிறபடி ப்ரமாணங்கொண்டறியவேண்டும்.

வினு:- ப்ரமாணவதென்னை?

விடை:- ப்ரமையை யுண்டுபண்ணுவதாம்.

வினு:- ப்ரமையாவதென்னை?

விடை:- ப்ரமையென்பது யதாவஸ்தித வ்யவஹாராநுகுண ஜ்ஞாநம் (வஸ்துவை உள்ளபடி க்ரஹிக்கும் அறிவு) யாதாவஸ்திதமென்கையாலே ஸம்சய அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களை நிவர்த்திக்கிறது.

வினு:- ஸம்சயமென்றுலென்னை?

விடை:- உயரமாயிருப்ப தொன்றைக்கண்டு அது தறியா? புருஷனு? என்று ஸந்தேகிக்கை.

MAHAMAHOPADHYAYA
DR U V SWAMINATHA IYER LIBRARY

வினா :- அந்யதாஜ்ஞாநமென்றால் என்ன?

விடை :- ஒரு வஸ்துவினிடத்திலிருக்கும் தர்மத்தை வேறாகக் கிரஹிக்கை. அஃதாவது வெள்ளை நிறமுடைய சங்கை காமாலைக் கண்ணன் மஞ்சள் நிறமுடையதென்று எண்ணுகை.

வினா :- விபரீதஜ்ஞாநமென்றால் என்ன?

விடை :- ஒரு வஸ்துவை அதனில் மாறுபட்ட பிறிதொரு வஸ்துவாகக் கொள்கை. அஃதாவது-அடிமையாயிருக்கிற ஆத்மாவை எஜமானனாக நினைக்கை.

வினா :- அப்படிப்பட்ட ப்ரமாணம் எத்தனை வகைப்படும்?

விடை :- ப்ரத்யக்ஷம், அநுமாநம், சப்தம், உபமாநம், அர்த்தாபத்தி, அபாவம், ஸம்பவம், ஐதிஹ்யம் என்று எட்டு வகைப்படும்.

வினா :- வைதீக ஸித்தாந்தத்துக்கு முக்யப்ரமாணங்களெவை?

விடை :- ப்ரத்யக்ஷம், அநுமாநம், சாஸ்திரம், என்ற மூன்றே முக்யப்ரமாணங்கள் மற்ற ஐந்துப்ரமாணங்களும் இம்மூன்றிலே அடங்கிவிடும்.

வினா :- ப்ரத்யக்ஷப் பிரமாணம் எந்த விஷயத்தில் உபயோகப்படும்?

விடை :- இந்திரியக்ரஹண யோக்யங்களில் ப்ரத்யக்ஷப்ரமாணம் உபயோகமாம்.

வினா :- இந்திரியங்கள் எவை?

விடை :- சுரோத்ரம் (செவி) த்வக்கு (மெய்) சக்ஷுர் (கண்) ஜிஹ்வா (வாய்) க்ராணங் (மூக்கு) களாம்.

வினா :- இந்திரியங்களால் க்ரஹிக்கப்படுமவை எவை?

விடை :- சப்த [ஓசை] ஸ்பரிச (ஊறு) ரூப [ஒளி] ரஸ (சுவை) கந்தம் [நாற்றம்] களாம்.

வினா :- அநுமாநப் பிரமாணம் எந்த விஷயத்தில் உபயோகம்?

விடை :- ப்ரத்யக்ஷ ஸித்தமாய் வியாப்தி கிருஹிக்கப்பட்ட பரோக்ஷார்த்தங்களில் பிரமாணமாம்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
சென்னை-600090.
75

வினு :- வ்யாப்தியாவது என்ன?

விடை :- ஸாஹசர்ய நியமமானது வ்யாப்தி யெனப்படும். அஃதாவது கூடவே யிருத்தல்.

வினு :- அஃது எதுபோல்?

விடை :- புகையிருக்கு மிடத்தில் நெருப்பிருப்பதைப்போல. ஆகவே, பிரத்யக்ஷாநுமாநங்களிரண்டும் இந்திரியங்களுக்கு ஏகதேசமும் புலப்படாத விஷயத்தில், பிரமாணங்களாகமாட்டா.

வினு :- இந்திரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடிய பிரமாணம் எது?

விடை :- பதினுன்கு வித்யைகளுள் ப்ரதானமாய் நித்யமாய் (எக்காலத்திலு முள்ளதாய்) அபௌருஷேயமாய் (புருஷனுற் செய்யப்படாததாய்) இருக்கிற வேத சாஸ்திரமேயாம்.

வினு :- பதினுன்கு வித்யைகள் எவை?

விடை :- நான்கு வேதங்களும், ஆறங்கங்களும், நான்கு உபாங்கங்களுமாம்.

வினு :- நான்கு வேதங்கள் எவை?

விடை :- ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னுமிவைகளாம்.

வினு :- *ஆறங்கங்களெவை?

விடை :- சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ்ஸு, நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என்பனவாம்.

வினு :- உபாங்கங்களெவை?

விடை :- மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரங்களாம்.

வினு :- சிக்ஷையாவதென்ன?

* "ஆறங்கமாவன, உலகியற்சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், இவ்விரண்டையும், உடஞராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் பரமார்த்தம் பரமாத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராகம் முதலிய கணிதமும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்." என்று நச்சினர்க்கினியர் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் உரைத்த உரையானும் அறிக.

விடை :- வர்ணஸ்வரமாத்ராதி நிரூபணம் பண்ணும் சாஸ்திரமாம்.

வினு :- வ்யாகரணமாவதென்ன?

விடை :- ப்ரக்ருதி ப்ரத்யய (பகுதி விகுதி) முகத்தாலே அர்த்தாபிதாயகமான பதங்களை நிரூபிக்கும் சாஸ்திரமாம்.

வினு :- சந்தஸ்ஸாவதென்னே?

விடை :- அநுஷ்டுபு, த்ருஷ்டுபு, காயத்ரி முதலிய சந்தங்களை நிரூபிக்கும் சாஸ்திரமாம்.

வினு :- நிருக்தமாவதென்ன?

விடை :- அபூர்வார்த்த ப்ரதிபாதக சாஸ்திரமாம்.

வினு :- ஜ்யோதிஷமாவதென்ன?

விடை :- அத்யயந ததர்த்தாநுஷ்டாந கால நிர்ணயம் பண்ணும் சாஸ்திரமாம்.

வினு :- கல்பமாவதென்ன?

விடை :- வேதார்த்தாநுஷ்டாந ப்ரகாரங்களை நிரூபணம்பண்ணும் சாஸ்திரம். அல்லது ச்ரௌத (சுருதிஸம்பந்த) ஸ்மார்த்த (ஸ்மிருதிஸம்பந்த) ப்ரயோக ப்ரதிபாதக சாஸ்திரமாம்.

வினு :- நியாய சாஸ்திரமாவதென்ன?

விடை :- அங்கங்களோடுகூடிய வேதங்களினுடைய அர்த்த ஔசித்யத்தை ப்ரமாணுதி நிரூபணங்களாலும், தர்க்க மர்யாதையாலும், நிரூபிக்கும் சாஸ்திரம்.

வினு :- மீமாம்ஸையாவதென்ன?

விடை :- வேத பதங்களினுடைய அர்த்த மகத்துவத்தை அறிவதற்கு உபயுக்த (உசித)மாக பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபேண உண்டான சாஸ்திரமாம். இது பூர்வ மீமாம்ஸை யென்றும், உத்தரமீமாம்ஸை யென்றும் இரண்டு வகைப்படும்.

வினு :- தர்ம சாஸ்திரங்களெவை?

விடை :- மநு, அத்ரி, விஷ்ணு, ஹாரீத, யாஜ்ஞவல்கியாதிகளாலே சொல்லப்பட்ட தரும சாஸ்திரங்களாம்.

வினு :- இதிஹாஸங்கள் எவை?

விடை :- பூர்வம் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லுகிற ஸ்ரீராமாயண மஹாபாரதங்களாம்.

வினு :- புராணங்கள் எவை?

விடை :- லோகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள் அரசர்கள் மரபு, அவர்கள் சரித்திரங்கள், மநுவந்தரம் என்னும் ஐந்து விஷயங்களைக் கலந்துகூறும் ப்ருஹ்ம, பாத்ம, வைஷ்ணவாதி ஸாத்விக புராணங்களாம்.

வினு :- புராணங்களில் ஸாத்விக புராணங்களென்று விசேஷித்துக் கூறியதின் கருத்தென்ன?

விடை :- ஸங்கீர்ண, ஸாத்விக, ராஜஸ, தாமஸ கல்பங்களில் புராணகர்த்தாக்களெல்லாரும் ப்ரும்மாவின் பக்கலிலே சென்று அந்தப்ரும்மா சொன்ன வார்த்தைகளைக் கேட்டு வந்து புராணங்களைச் செய்தார்கள். ப்ரும்மா ருஷிகளைக் குறித்து உபதேசிக்கின்றவிடத்தில் "நான் முக்குண வசப்பட்டவனுதலால், தமோகுணந் தலையெடுத்தபோதும், ரஜோகுணந் தலையெடுத்தபோதும், சொன்னவற்றை விட்டு ஸத்வகுணந் தலையெடுத்தபோது சொன்னவற்றை ஸ்வீகரிக்கக் கடவீர்க"ளென்று மச்ச புராணத்திற் சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையால் ஸாத்விக புராணங்களாலே உபப்ருஹிதமான வேதம் பிரமாணமாகவேண்டும். [தொடரும்.]

ஸ்ரீ:

ஸம்பந்த ஜ்ஞாநம்.

ஸம்பந்த ஜ்ஞாநமாவது—ஸர்வேசுவரனுக்கும், ஆத்மாக்களாகிய நமக்கும் உள்ள வுறவு இன்னவென்று அறியுமறிவாம். இச் சம்பந்த ஜ்ஞாநமில்லாததினுலன்றோ நாம் நெடுங்காலமாக ஸர்வேசுவரனை விட்டுப் பிரிந்து பிறவிக்கடலிலாழ்ந்து துன்புறுகின்றோம். ஸர்வேசுவரனையும், நம்மையும் பொருத்திவைப்பது இச் சம்பந்த ஜ்ஞாநமேயாம். ஸம்பந்தஜ்ஞாநமுடையவரிடத்தில், ஸர்வேசு

வரன் விரும்பியடைவான் ஆதலால் ஸம்பந்தஜ்ஞாநம், அவனையும் விருப்புறுத்துதற்கு உரியதாயிருக்கிறது. இந்த ஜ்ஞாநமில்லாத ஜன்மம் ஜன்மமென்று சொல்லப்படமாட்டா. இக் கருத்துப் பற்றியே திருமழிசையாழ்வார் "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றார். இதனாலும் ஸம்பந்தஜ்ஞாநமில்லாத பிறப்பு, பிறப்பென்று கருதப்படமாட்டா வென்பது வெளியாயிற்று. இந்த ஸம்பந்த ஜ்ஞாநமாத்திரத்தால், ஈசுவராங்கிகாரமுண்டாம் என்பதைக் கீழ்க்குறிப்பிடும் வரலாற்றால் அறியலாம்.

நம்மாழ்வார் ஸர்வேசுவரனுடைய அருளினால் அவனுடைய தத்வ இயல்புகளை எல்லாம் நன்றாய் அறிந்து அநுபவித்து, அவைகளைத் தெளிவாய் "உயர்வற வுயர்நலமுடையவன்" என்ற பதிகத்தில் அருளிச்செய்தார். பின் ஸர்வரஸனுயுள்ள ஸர்வேசுவரனை நாம் மாத்திரம் அநுபவிப்பதால் பிரயோஜனமென்? "ஏகஸ்வாது நபுஞ்சீத" (நல்லதொன்றைத் தனியாயிருந்து அநுபவிக்கலாகாது) என்பது முறையன்றோ! மேலும் கொள்ளமாளா வின்பவெள்ளமாயிருக்கிற ஸர்வேசுவரனை நாம் தனித்து நின்றுதான் எவ்வாறு அநுபவிப்பது? ஆகவே இனி நம்மொடு பலரையுங் கூட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி, உலகத்தார் எந்த நிலைமையிலிருக்கின்றார்களென்று ஆராய்ந்தார்.

அப்பொழுது தாம் எவ்வாறு ஸர்வேசுவரனிடத்தில் ஈடுபட்டுப் பக்தி கொண்டிருக்கின்றாரோ அதுபோல உலகத்திலுள்ள சம்சாரிகள் உண்டுடுத்தித் திரிவதே புருஷார்த்தமெனக் கருதித்தம் வாணாளை வீணாளாகக் கழித்துத் திரிய, அந்தோ! இஃதென்ன இச்சம்சாரிகள் ஸர்வேசுவரனைப்பற்றி நிரதிசயாநந்த வாழ்வை யடையாமல் இவ்வாறு காலங்கழித்து வீணைக் கெட்டலைகின்றார்களே இனி எவ்வாறாவது இவர்களை நல்வழிப்படுத்தவேண்டுமென்று இரக்கங்கொண்டு "வீடுமின்முற்றவும்" என்று உபதேசிக்கத் தொடங்கினார்.

(கீழ்க்குறிக்கப்படுவன ஆழ்வார் சம்சாரிகளை நோக்கிக்கூற அதற்கவர்கள் மறுமொழி கூறியதாகத் தாமே திருவுள்ளம்பற்றிக் கூறியவை என்றறிக.)

ஆழ்வார்-நீங்கள் இதர விஷயங்களிலுள்ள ஆசைகளை எல்லாமொழித்து உங்களுக்கே வகுத்தவிஷயமாயிருக்கிற ஸர்வேசுவரனைப் பற்றுக.

சம்சாரிகள்- நீர் நாங்கள்பற்றிய இதர விஷயங்களை யெல்லாம் விடச் சொன்னீர் அநாதிகாலம்பழகி அடிப்பட்ட விஷயங்களை இப்பொழுது அடியோடு விட்டுவிடுவது எவ்வாறு கூடும்?

ஆழ்-சந்தனத்தில் விருப்பமுடையானொருவன் வாசனை குளிர்ச்சி மென்மைகளைக்கண்டு சர்ப்பத்தின்மீது கைவைத்து உறங்குவானாகில் அவனை அருளுடையானொருவன் கண்டு இது பாம்பென்று அறிவித்தால், பின் அவன் பயந்து அதைவிட்டு எவ்வாறு நீங்குவானோ அதுபோல நீங்கள் பற்றிய விஷயம் மிகவும் தோஷமுடையனவெனத் தோற்றுமாகில், தன்னடையிலே நீங்கள் விட்டொழிப்பீர்களன்றோ?

சம்- நாங்கள்பற்றிய விஷயத்தின் தோஷத்தை விளங்கச் சொல்ல வேண்டும்?

ஆழ்-திறந்துகிடந்த வாசல்தோறும் நுழைந்துதிரியும் பதார்த்தம் போல ஆத்மா கர்மபேதத்தால் பல சரீரங்களிலே புக்குத் திரிகின்றது. அச் சரீரந்தான் நிலைநின்றதோவெனில்? மின்னலைப்போல நிலையற்றது. ஆதலால் நீங்கள் இது இன்ன தன்மையது என்றறிந்து ஸர்வேசுவரனை அடைவீர்களாக.

சம்- நாங்கள் பற்றிய விஷயத்தின் தோஷந் தெரியவே விடலாமென்றீர் அது நிற்க அநாதிகாலம் இதரவிஷயங்களைப் பற்றிப் போந்தோம். விடுகைக்கும் அவ்வளவு காலம் வேண்டாவோ? விரைவில் விடுவதெப்படி?

ஆழ்-நாம் விடுமென்று சொல்லத் தக்கவை மிகுதியும் இருக்கின்றனவென்று கருதவேண்டாம். இரண்டேயாம்.

சம்- அவை எவை?

ஆழ்-தானல்லாத தேகத்தைத் தானெனக் கருதுகிற அகப்பற்றையும், தன்னுடையவல்லாத வஸ்துக்களைத் தன்னுடையவையெனக்கருதும் புறப்பற்றையும் போக்கி ஸர்வேசுவரனை யடையக்கடவீர். அவ்வாறடைதலினும் சிறந்தது நுங்களுக்குப் பிறிதொன்றில்லை.

சம்- பற்றப்படும் வஸ்து இன்ன தன்மையதென்று சொல்லுக?

ஆழ்-எல்லையில்லாத ஆநந்தமுடையது; இதைப் பற்றியவன் பிரமாதி ஐசுவர்யங்களிலும், ஆத்ம மோக்ஷமாகிய கைவல்யத்திலும், கண்வைக்கமாட்டான்.

சம்- நீர் ஸர்வேசுவரன் எல்லையில்லாத ஆனந்த குணமுடைய பெரியவனென்றீர். அவ்வளவு பெரியவன் அற்பர்களாகிய எங்கள் கைவசப் படுவானோ?

ஆழ்-ஸர்வேசுவரன் அறப் பெரியோனாகிலும், தன்னை யடைந்தவர்களிடத்தில் அன்புடையவனாகியும், எளியவனாகியும், இருப்பான். ஆதலால் நீங்கள் பற்றுதற்கு யாதொருதடையுமில்லை.

சம்- கடலிலகப்பட்ட துரும்புக்கு அலைகளால் தள்ளப் படுவோமென்ற நினைவில்லை. அலைகளுக்கும் துரும்பைத் தள்ளிக் கரையிற் சேர்க்க வேண்டுமென்ற நினைவில்லை. இவ்விரண்டுக்கும் நினைவில்லாதிருக்கவே துரும்பு, திரைமேற்றிரையால் தள்ளுண்டு கரையிற் சேருவதுபோல ஸர்வேசுவரனுக்கு எங்களை அநாதரிக்க வேண்டுமென்ற எண்ணமில்லாதிருந்தாலும், ஸர்வேசுவரனால் நாங்கள் அநாதரிக்கப் படுவோமென்ற நினைவு எங்கட்கு இல்லாதிருந்தாலும், அவனுடைய மஹத்தான ஐசுவர்ய தரங்கங்கள் எங்களைத்தள்ளிவிடுமன்றோ

ஆழ்-காணப்பட்ட எல்லா ஐசுவர்யங்களும், நமக்கு ஸ்வாமியாகிய ஸர்வேசுவரனுடைய சொத்துக்களென்று நினைத்து, அவ்வைசுவர்யங்களில் நாமுஞ் சேர்ந்தவர்களாவோமென்ற ஸம்பந்தஞ் ஞானமாத்திர முண்டாகுமானால், அவனோடு சேரலாம். கடல் ஆழமுடையதாயும், அளவற்றதாயு மிருந்தாலும், நமக்கு வாழும் நிலம் இதுவே என்று நினைத்துக் கொண்டிருக்கிற கடலில் வாழும் ஜந்துக்களுக்கு இடங்கொடுத்து அங்ஙனம் நினைவில்லாத துரும்பையன்றோ கடல் கரையில் தள்ளுகிறது. அதுபோல ஸர்வேசுவரன் மிகுந்த ஐசுவர்யத்தையும், பெருமைய்யயு முடையவனானாலும், அவனால் நாம் ரக்ஷிக்கப்படுவோம் என்ற ஸம்பந்த உணர்வுண்டாகுமானால் அவனைக் கிட்டுதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

''அடங்கெழிற்சம்பத்தடங்கக்கண்டு
ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே''

இப்பாட்டால், ஸம்பந்த ஜ்ஞானமாத்திரத்தால், ஸர்வேசுவரனை யடையலாமென்று சொல்லப் படுகிறது. இப்பாட்டை அடங்கு எழில் சம்பத்து அடங்கக்கண்டு அஃது ஈசன் அடங்கு எழில் என்று உள்ளே அடங்குக, என்று அந்வயித்துக்கொள்க.

அடங்கு எழில் சம்பத்து அடங்கக்கண்டு என்றது, எல்லாம் நன்றாயிருக்கின்ற இன்பத்தை விளைக்கும், நித்ய விபூதியும், லீலா விபூதியுமாகிய எல்லாச்சம்பத்தும், ஆராய்ந்து என்றவாறு. அஃது ஈசனடங்கு எழில் என்று என்றது, அந்த சமஸ்த ஐசுவர்யமும், ஈசுவரனுடையதென்று கருதி என்றவாறு. உள்ளே அடங்குக என்றது—அவ்வைச்வர்யங்களுக்குள் நாமும் அடங்கினேமென்று அநுஸந்திக்கக் கடவம் என்றவாறு. இதனால் ஸர்வேசுவரன் ரக்ஷகன் எனவும், நாம் ரக்ஷியம் எனவும், ஓர் ஸம்பந்த ஜ்ஞாநமுண்டாகுமானால், நாம் அவனைச் சென்று கிட்டலாமென்பது திரண்ட பொருளாம்.

ஒரு வியாபாரியானவன் பொருளில்லார்க்கு இவ்வுலக இன்பமில்லை யென்பதறிந்து தன் மனைவி கர்ப்பிணியாயிருப்பதையுங் கருதாமல் பொருளீட்டும்பொருட்டுத் தேசாந்தரஞ் சென்றான். சென்றவிடத்தில் நல்வினைப்பயனால் அவனுக்கு மிகுதியும் ஊதியங் கிடைத்தது. அதனால் அவன் மகிழ்வுற்று அவ்விடத்திலே பல ஆண்டுகள் தங்கிவிட்டான். இஃதிவ்வாறாக, அவ் வணிகன்மனைவி ஓராண்மகவைப் பெற்றெடுத்தாள். அவனும் யௌவன பருவமடைந்து தகப்பனுக்குரிய தொழிலாகிய வாணிகத்தொழிலை மேற்கொண்டிருந்தான். ஒருநாள் அவன் அனைவருங்கூடுகிற சந்தைக்கடையிற் சென்று வியாபாரஞ்செய்யக்கருதி அவ்விடத்தில் வாடகைக்கு ஓரிடந் தீர்மானித்துத் தன் சரக்குகளை வைத்து வியாபாரஞ்செய்து வந்தான். அப்பொழுது தேசாந்தரஞ் சென்றிருந்த தகப்பனாகிய வணிகனும் தன் சரக்குகளை வைப்பதற்குப் பிறிதோரிடமில்லாமையால் மகனாகிய வணிகன்கடையில் சிறிது வெற்றிடமிருக்கக் கண்டு, அவ்விடத்தில் தன் சரக்குகளை வைத்தான். இருவர் சரக்குகளும், அங்கு அடங்காமையைக் கண்ட மகனாகிய வணிகன் அடங்காக் கோபங்கொண்டு என்னிடத்தில், உன் சரக்குகளை வைக்கலாமா? என்று வழக்கிட்டான். பின் அவ்விருவர்க்குந் தீராப் போருண்டாயிற்று. அப்பொழுது அவ்விரண்டு பேர்களின் உறவறிந்தானொருவன் வந்து என் நீங்களிருவீரும் தீராப் போர்புரிகின்றீர்கள் இவன் உன் பிதாவாவான். நீ அவன் புத்திரனாவாய் என்று இருவர்க்குமுள்ள சம்பந்தத்தை வெளியிட்டான். உடனே அவ்விருவரும் போரினின்றும் விடுபட்டவர்களாய் ஒருவரோடொருவர் அளவளாவி அந்தோ! நாம் இன்னவுறவை யுடையோமென்று முன்னரே அறிந்திருப்போகில், நம்மிருவரது சரக்குகளை

யும் ஒருங்குசேர்த்து மிகுதியும் பொருளீட்டி யிருக்கலாமே; இனி என் செய்வதெனக் கழிந்ததற்கு இரங்கினர். அதுபோல, *சரீரமாகிய விருக்ஷத்தில், ஜீவாத்மா, பரமாத்மா, என்கிற இரண்டு பக்ஷிகள் கூடியிருக்கின்றன. அவற்றுள் பரமாத்மாவாகிய பக்ஷி ஜீவாத்மாவாகிய பக்ஷியை நோக்கி நீ எனக்கு அடிமையாவாய் என்றது. அதற்கு ஜீவாத்மாவாகிய பக்ஷி உடன்படாமல் நான் எனக்கே உரியவனென்று எதிர் வழக்கிட்டுப் போர்விளைத்தது. அப்பொழுது ஒரு ஆசார்யன் வந்து நீ இவனுக்கு அடிமையாவாய் அவன் உனக்கு எஜமானனுவான என்று இருவர்க்குமுள்ள ஸம்பந்தத்தை யறிவித்து ஜீவாத்மாவைப் பரமாத்மாவின் திருவடிகளிற் சரணம் புகும்படி திருத்தித் தேவருக்கு அடிமையான இவ் வாத்மாவைக் குற்றங் கண்டு அகற்றிவிடாமல் அங்கீகரிக்கவேண்டுமென்று பரமாத்மாவினிடத்திற் புருஷகாரஞ்செய்து கூட்டிவைப்பான். அங்ஙனங் கூடியவிடத்து ஜீவாத்மா மிகவும் சுலபனுன பரமாத்மாவைவிட்டு அநாதிகாலமிழந்து அநர்த்தப்பட்டேனே என்று சோகிக்கப் பரமாத்மா நமக்கு ஒழிக்கமுடியாத ஸம்பந்தத்தையுடைய ஜீவாத்மாவைக் கர்மத்தை வ்யாஜமாகக்கொண்டு அநாதிகாலந் தள்ளிவிட்டோமே என்று சோகிக்க இப்படி இருவரும் கழிந்ததற்கு இரங்கிக் கூடுவார்கள்.

ஸம்பந்த ஜ்ஞாநம் ஒன்பது வகைப்படும். அவையாவன (1) பிதாபுத்திர ஸம்பந்தம் (2) ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தம் (3) சேஷ சேஷி ஸம்பந்தம் அடிமை எஜமான ஸம்பந்தம்) [4] பர்த்ருபார்யா ஸம்பந்தம் 5) ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம் அறிபவன் அறியப்படுமவனுகிய ஸம்பந்தம்) (6) ஸ்வஸ்வாமி ஸ்ம்பந்தம் [சொத்து சொத்தையுடையவனுகிய ஸம்பந்தம்] (7) சரீர சரீரி ஸம்பந்தம் (8) ஆதார ஆதேய ஸம்பந்தம் (தரிப்பது தரிக்கப்படுவதாகிய ஸம்பந்தம்) 9) போக்த்ரு போக்ய ஸம்பந்தம். (அநுபவிப்பவன் அநுபவிக்கப்படுமவனுகிய ஸம்பந்தம்) என்பனவாம். இவ் வொன்பது வகையான ஸம்பந்தம் ஸர்வேசுவரனுக்கும் நமக்கும் அநாதியாய் ஏற்பட்ட ஒழிக்கவொண்ணுத ஸம்பந்தங்களாம். இத்தகைய உற

* "உடம்பினைத் தருவொன்ருகவுஞ்சீவனெடுபரமாத்துமாத்தன்னை
இடம்படுபுள்ளோரிரண்டதாகவுமவ்விரண்டினிற்சீவனுகியபுள்
அடர்ந்திடுங்கருமபலத்தினை நாருமனுபவித்துறைந்திடுமென்றும்
தடம்பெறுபரமனுனபுள்ளருகேசாட்சியாயிருந்திடுமென்றும்"

வைப்பெற்றிருந்தும் நாம் அவனைவிட்டு நீங்கியிருப்பதற்குக் காரணம் யாதெனின்? இராஜபுத்திரன் வேடன்கையில் அகப்பட்டுத் தன்னை வேடனென்றே கருதியிருக்குமாப்போல நாம் நீண்டகாலமாக அஹங்கார மமகாரங்களாற் கட்டுண்டு நமக்கு நாமே யுரியோமென்று கருதிப் போந்ததால் என்க. இனி அதை ஒழித்துச் சம்பந்த ஜ்ஞாநம் பெற்று ஸர்வேசுவரனோடு கூடி வாழ்வோமாக.

நியாயவேதாந்த வித்வான்,
ஸாது ராமாநுஜாசார்யர்,
ஸ்ரீ சரண்யாபிமத விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபை.
மதுரை.

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதம்.

(35-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி விசிஷ்டாத்வைதம் என்பதற்கு மற்றொரு வகையாற் பொருள் கூறுவாம். விசிஷ்டஸ்ய—சேதநாசேதனங்களைச் சரீரமாகவுடையவனுடைய, அத்வைதம்—நிமித்தோபாதாந ஸஹகாரி காரணமாகிய பிறிதொன்றில்லாமை. அஃதாவது தானே நிமித்த காரணமாயும், உபாதாந காரணமாயும், ஸஹகாரி காரணமாகியுமிருக்கையாம். நிமித்தகாரணமாவது—கார்யரூபேண விகரிப்பிக்கும் கர்த்ருவஸ்து. அஃதாவது—ஒரு வஸ்துவைக் காரியப்படுத்துகிற கர்த்தாவென்பதாம். மண்பிண்டத்தைக் குடமாக்குகிற குயவன் நிமித்தகாரணமாம். உபாதாந காரணமாவது—காரியரூபேண விகரிக்கைக்கு யோக்யமான வஸ்து. அஃதாவது—காரியமாதற்குத் தகுதியான வஸ்துவென்பதாம். குடமாதற்குத் தகுதியாயிருக்கின்ற மண்பிண்டம் உபாதானகாரணமாம். ஸஹகாரி காரணமாவது—கார்யரூபேண விகரிக்கைக்கு உபகரணமான வஸ்து. அஃதாவது—காரியத்தை யுண்டுபண்ணுதற்குத் துணையாயிருக்கின்ற கருவி யென்பதாம். குடத்தை யுண்டுபண்ணுதற்குத்

துணையாயிருக்கின்ற தண்ட சக்கர முதலியன ஸஹகாரி காரணமாம். இங்கு அத்வைதம் என்பதற்கு நிமித்தோபாதாந ஸஹகாரி காரணங்களாகிய பரபிருஹ்மவஸ்துவில் பிறிதொன்றில்லாமை பொருள் என்றால், மேற்கூறப்பட்ட திருஷ்டாந்தத்தில் நிமித்த காரணம் குயவனும், உபாதாநகாரணம் மண்பிண்டமாயும், ஸஹகாரி காரணம் தண்ட சக்கர முதலியவையாயுமிருப்பதுபோல இங்கும் மூன்று காரணங்களும் வெவ்வேறு யிருத்தல்வேண்டும். அங்ஙனமிருக்க மூன்று காரணங்களுந் தானேயாயிருக்கின்றானென்பது எவ்வாறு பொருந்துமெனின்? மண்பிண்டத்துக்கு அறிவில்லாமையால் தான் குடமாக்குதற்குரிய நிமித்தமாக முடியவில்லை. குயவனுக்குக் கார்யமாக விகரிக்குஞ் சக்தியில்லாததினால் தான் உபாதாநமாதற்கு முடியவில்லை. ஆகையால் மண்பிண்டம் குயவனை விரும்பவும், குயவன் மணபிண்டத்தை விரும்பவும் நேர்ந்தன. ஆதலால் காரணங்கள் வெவ்வேறாயின. இங்கு ப்ருஹ்ம வஸ்துவாகிய ஸர்வேசுவரன் ஜ்ஞாந சக்திகளோடு கூடினவனாதலால்; தானே நிமித்தோபாதாந ஸஹகாரி காரணமாயிருப்பதற்கு யாதொரு தடையுமின்றெனக் கொள்க.

சுருதி ஸ்மிருதிகளிற் சிருஷ்டிப்பிரகரணத்தில் ஸர்வேசுவரன் நானே ஜகத்தாகிறேனென்றும், "ஸஏவஸ்ருஜ்யஸ்ஸசஸர்க்க கர்த்தா" (சிருஷ்டிப்பவனும் சிருஷ்டிக்கப்படுமவனும் நானே) என்றும் சொல்லப்பட்டுளதற்கேற்ப முற்கூறிய மூன்று காரணங்களும் ஸர்வேசுவரனேயானாலன்றி அவ்வாறு கூறியது பொருந்தாதலால் திரிவிதகாரணமும் அவனே என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஜகத்தானது சேதனாசேதன ஸ்வரூபமாயன்றோ காணப்படுகிறது. அவ்வாறிருக்க ஸர்வேசுவரன் ஜகத்தாகிறேன் என்று கூறியது எவ்வாறு பொருந்துமெனின்? நானே ஜகத்தாகிறேனென்பதற்குச் சேதனாசேதனங்களைச் சரீரமாகக்கொண்டு ஜகத்தாகிறேன் என்று பொருளுரைத்துக் கொள்க. ஜகத்சப்தம் பிரத்யக்ஷப்ரமாண கம்யமான பிருஹ்மத்தையும், ஜகத்தையும், காட்டுமோவென்னில்? தேவதத்தாதி சப்தம் பிரத்யக்ஷப்ரமாணத்தால் அறியப்படும் சரீரத்தையும், ஆத்மாவையும் காட்டுவதுபோல் காட்டலாமென்க.

இதுநிற்க எல்லாச்சொல்லும் *அபர்யவஸாந விருத்தியால் ஸர்வேசுவரனைக் குறிப்பிடுமென்பது வேதாந்தமுணர்ந்த பண்டிதர்களின் துணிபு.

இனி எல்லாச்சொல்லும் ஸர்வேசுவரனையே குறிப்பிடுமென்பதை மற்றொருவகையாற் கூறுவாம். தேவதத்தன் அறிகிறான் என்ற வாக்யத்தை ஆராயவேண்டும். அறிதல் தேவதத்தனாகிய அறிவற்ற சரீரத்திற் கில்லையாம். தேவதத்தனாயிருக்கை ஆத்மாவுக்கில்லையாம். பின்னை இதற்கு எவ்வாறு பொருள்கொள்வதெனின்? தேவதத்தனென்ற சரீரத்தையுடைய ஆத்மா அறிகிறானென்று பொருள்கொள்ளவேண்டும். தேவதத்தனாயிருக்கை ஆத்மாவுக்கில்லையானாலும்; தேவதத்தனென்ற சரீரத்தைத் தனக்கு ஆதாரமாகக்கொண்ட ஒற்றுமையால், ஆத்மாவைக் குறிக்கும். வேதத்தில் பரமாத்மாவுக்கு ஜீவாத்மாவுஞ் சரீரமாயிருக்குமென்று கூறியதினால், ஆத்மாவைக் குறிக்கும் சொல்லும் அபர்யவஸாந விருத்தியால் பரமாத்மாவைக் குறிக்குமென்றறியவேண்டும். ஜீவாத்மாவாயிருக்கை பரமாத்மாவுக்கில்லையானாலும், ஜீவாத்மாவைத் தான் சரீரமாகக்கொண்ட ஒற்றுமையால் பரமாத்மாவைக் குறிக்குமென்றறிக. ஆக தேவதத்தன் என்ற சொல்லுக்குச் சரீரமும் அதனோடுகூடிய ஆத்மாவும் அவ் வாத்மாவுக்கும்அந்தராத்மாவாய் விளங்குகிற பரமாத்மாவும் ஆகிய மூன்றும் பொருளாம். இந்த நியாயத்தால் கடபடாதி ஸமஸ்த சொற்களும், பரமாத்மாவையே

---

* சொற்களுக்கு இரண்டுவகையால் பொருளுணர்த்தும் ஆற்றலுண்டு. அவையாவன-பர்யவஸாநவிருத்தி சக்தியும், அபர்யவஸாந விருத்தி சக்தியுமெனை. அவற்றுள் பர்யவஸாநவிருத்தி சக்தியாவது-முக்யவிசேஷ்யத்தை யறிவியாமல் விசேஷண மாத்திரத்தில் முடிவு பெறும்சக்தியாம். இது அமுக்யவிருத்தி யெனவும் படும். இதுஉலகவழக்கில் வழங்கப்படுவதாம். அஃதாவது-பக்ஷி, பசு, மனுஷ்யனென்றால் பக்ஷிசரீரத்தையும், பசுசரீரத்தையும், மனுஷ்யசரீரத்தையுமுடைய ஆத்மாக்களென்று பொருள்கொள்வதாம். அபர்யவஸாந விருத்தியாவது முக்ய விசேஷ்ய பர்யந்தம் உணர்த்தியன்றி முடிவுபெறாதிருக்கை. இது முக்யவிருத்தி யெனவும் படும். இது வேதாந்தத்திலே வழங்கிவரற்பாலதாம். அஃதாவது-பக்ஷி, பசு, மனுஷ்யன் என்றால், பக்ஷிசரீரத்தையும், பசு சரீரத்தையும், மனுஷ்ய சரீரத்தையுமுடைய ஜீவாத்மாக்களுக்கு அந்தராத்மாவாயிருக்கிற பரமாத்மாவென்று விசேஷ்ய பர்யந்தம் பொருள்கொள்வதாம்.

குறிக்கும். இக் கருத்துப்பற்றியே மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்,

"கடல்ஞாலஞ்செய்தேனும்யானேயென்னும்
கடல்ஞாலமாவேனும்யானேயென்னும்
கடல்ஞாலங்கொண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலங்கீண்டேனும்யானேயென்னும்
கடல்ஞாலமுண்டேனும்யானேயென்னும்........."

என்று ஸர்வேசுவரன் செய்த காரியங்களை யெல்லாம், தன்னை அவனாகப் பாவித்துத் தான் செய்ததாகக் கூறினார். மேலும் ஆழ்வார்

"புகழுநல்லொருவனென்கோபொருவில்சீர்ப்பூமியென்கோ
திகழுந்தண்பரவையென்கோதீயென்கோவாயுவென்கோ
நிகழுமாகாசமென்கோநீள்சுடரிரண்டுமென்கோ
இகழ்விலிவ்வனைத்துமென்கோகண்ணனைக்கூவுமாறே"

எல்லாமாயிருக்கின்ற ஸர்வேசுவரனை என்னென்று சொல்லி யழைப்பேனென்று வேதாந்தத்தின் உட்பொருளை அருளிச்செய்தார். இக்கருத்தை உட்கொண்டே "தத்வமசி" (நீ அதுவாகின்றாய்) என்ற வாக்யம், ஆசார்யர் சுவேதகேதுவை நோக்கி உபதேசித்தார். வாமதேவர் "அஹமநுரபவம்ஸூர்யச்ச" எல்லாம் பரபிருஹ்ம ஸ்வரூபமென்றறிந்து நான் மனுவாகவும், ஸூர்யனாகவுமானேன் என்று கூறினார். பிரகலாதாழ்வானும், "மத்தஸ்ஸர்வம்" அஹம்ஸர்வம் என்று எல்லாம் நானே யாயிருக்கிறேனென்று அவ்வாறே அருளிச்செய்தான். (தொடரும்.)

உடலெடுத்ததின் பயன்.

(56-ம் பக்கத் தொடர்ச்சி.)

முன் சொல்லப்பட்ட ஆத்மாவின் லக்ஷணத்தையும், சரீரத்தின் லக்ஷணத்தையும் ஆராய்வோமாகில், ஒன்றுக்கொன்று ஒரு வகையாலும், பொருத்தமில்லாத விரோதமுடைய வஸ்துவாம். எவ்வாறெனின்? ஆத்மா ஜ்ஞானமுடையதாயிருக்கிறது. சரீரம் அறிவற்றதாயிருக்கிறது. இவ்விரண்டும் உடன்சேருதல் ஆச்சர்யமேயாம். மேலும் இவற்றிற்குரிய மற்ற லக்ஷணங்களும், ஒன்றுபட்டிருக்கமுடியாத பரஸ்பரம் விரோதமுடையனவாகவே இருக்கின்றன. அவையாவன ஆத்மா அநந்தமயமாயிருக்கைக்குச் சரீரம் துன்பமுள்ளதாயிருக்கையும், ஆத்மா நிர்மலமாயிருக்கைக்குச் சரீ

ரம் மாசுடையதாயிருக்கையும், ஆத்மா நித்தியமாயிருக்கைக்குச் சரீரம் அநித்யமாயிருக்கையும், ஆத்மா ஏகரூபமாயிருக்கைக்குச் சரீரம் மாறுதலுடையதாயிருக்கையும், ஆத்மா ஸூக்ஷ்மமாயிருக்கைக்குச் சரீரம் ஸ்தூலமாயிருக்கையும், ஆத்மா அப்பிராகிருதமாயிருக்கைக்குச் சரீரம் பிராகிருதமாயிருக்கையும், ஆத்மா ஜாக்கிரதையாயிருக்கைக்குச் சரீரம் நித்திரையாயிருக்கையும், ஆத்மா க்ஷமமாயிருக்கைக்குச் சரீரம் அக்ஷமமாயிருக்கையும், ஆத்மா சுத்தமாயிருக்கைக்குச் சரீரம் அசுத்தமாயிருக்கையுமாம்.

இச்சரீரம் அழியுமியல்பினை யுடையதென்பதை ஆத்மாவின் நீக்கத்தின்பின் அழுகிப்போகும் இயல்புடைமையால் அறியலாம். இங்ஙனம் அழியுந்தன்மைத்தான சரீரத்தோடு அழியாவியல்பினை யுடைய ஆத்மாவை ஒளியையும், இருட்டையும், நீரையும், அக்நியையும், ஒன்று சேர்ப்பதுபோல ஸர்வேசுவரன் தன் அகடிதகடனா ஸாமர்த்தியத்தினால் சேர்த்துப் பல வருஷங்கள் நிலைத்து நிற்கும்படி செய்திருக்கிறான். ஸர்வேசுவரன் ஸர்வ வல்லவனென்பதைச் சாஸ்திரத்தாற் கேட்டறியவேண்டாம். இச் சரீரத்தோடு ஆத்மாவை ஒன்றுசேர்த்திருக்கிற ப்ரத்யக்ஷப் பிரமாணத்தால் அறியலாம். ஒன்றுக்கொன்று விரோதமான சரீரத்தையும், ஆத்மாவையும், ஸர்வேசுவரன் ஒன்றுசேர்த்து வைத்ததற்குக் காரணம் யாதெனின்? ஆத்மா தனியேயிருந்து ஒன்றையும் அறிந்து நன்மையை அடையமுடியாதலால் அது நன்மையை யடையும் பொருட்டு அதைச் சரீரமாகிய கருவியோடு சேர்த்துவைத்தான் என்க.

இவ்வாறு பேருபகாரஞ் செய்த ஸர்வேசுவரனுக்கு நாம் செய்யவேண்டியவைகளை ஆராய்வோம். "விசித்ரா தேகஸம்பத் திரீசுவராய நிவேதிதும்" என்று சாஸ்திர முறையிடா நின்றது. இதனால் நாம் செய்யத்தக்கது இன்னதென்ப துரைக்கப்பட்டது. விசித்ரமான தேக ஸம்பத்தாவது—ஆச்சர்யமான தேகைசுவர்ய மென்றவாறு. அஃதாவது—பொருந்தாத தொன்றுடன் பொருந்திய தேகஸம்பத் தென்பதாம். ஆச்சர்யம் பலவற்றுள்ளும் ஒன்றோடொன்று கூடமாட்டாத இரண்டு ஒன்று கூடியிருத்தல், மிகவும் ஆச்சர்யமாகையால், விசித்ரா தேகஸம்பத்தென்று விசேஷித் துரைக்கப்பட்டது. இக்கருத்துப்பற்றியே,

"*வருந்துமுயிரொன்பான்வாயிலுடம்பிற்
பொருந்துதல்தானேபுதுமை— திருந்திழாய்
சீதநீர்பொள்ளற்சிறுகுடத்துநில்லாது
வீதலோநிற்றல்வியப்பு."

என்றார். ஆத்மா தேகமாகிய சாதனத்தைப்பெற்றே நிலைநின்ற புருஷார்த்தத்தைப் பெறவேண்டி யிருப்பதால் தேகமானது ஸம்பத்தென்று கொண்டாடப்பட்டது. இங்ஙனம் இச் சம்பத்தைப் பெற்றிருப்பது எதன்பொருட்டெனின்? ஈசுவராய—சரீரேந்திரியாதி·ஸம்பத்தைக்கொடுத்த ஸர்வேசுவரன் பொருட்டு, நிவேதிதும் உபயோகப்படுத்தற் குரியதாம். இதுபற்றியே திருவரங்கத்தமுதனாரும் "மாயவன்றன்னை வணங்கவைத்த கரணமிவை யுமக்கன்று" என்று அருளிச்செய்தார். இங்கு மாயவனென்றது, ஆச்சர்யமான செய்கையையுடையவன் என்பதாம். ஒன்றுக்கொன்று விரோதமான ஆத்மாவையும், சரீரத்தையும் உடன்சேர்க்குஞ் செயல் பிறராற் செய்யவொண்ணாத செயற்கரிய செயலாம். இச்செயலையுடைய ஸர்வேசுவரனை வணங்கவைத்த வணங்குதற்கென்றே உண்டாக்கின கரணமிவை மெய்மொழி மனங்களாகிய திரிகரணங்களும், உமக்கன்று—ஜீவர்களுடைய ஸ்வப்பிரயோஜனார்த்தமன்று என்றவாறு. இதனால் கரணங்களெல்லாம் ஸர்வேசுவரன் விஷயத்தில் பிரயோஜனப்படவேண்டுமென்பது விளங்குகின்றது.

"உள்ளமுரைசெயல்உள்ளவிம்மூன்றையும்
உள்ளிக்கெடுத்திறையுள்ளிலொடுங்கே"

என்று ஆழ்வாரும் அருளிச்செய்தார். இப்பாட்டால் மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களையும், ஸர்வேசுவரன் விஷயத்தில் உபயோகப்படுத்தவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

---

* இப்பாட்டால் சரீரத்தோடு ஆத்மா பொருந்துதலே ஆச்சர்யமென்பதுரைக்கப்பட்டது. திருந்திழாய்- திருத்தமான வேலைப்பாடுற்ற ஆபரணமணிந்த பெண்ணே! உயிர் உடம்பில் பொருந்துல் தானே புதுமை ஆத்மா சரீரத்தோடு சேர்ந்திருத்தலே ஆச்சர்யமாம் உயிரும், உடலுங் கூடி வாழ்வதற்கு இவை ஒத்தவினமுமன்று; ஒன்றிற்கொன்று விரோதமுடையதுமாம். இங்ஙனமிருக்க இவை ஒன்றோடொன்று பொருந்துதலே விசித்திரமாம் என்பார்; உடலிற் பொருந்துதல்தானே புதுமை என்றார். சரீரமானது, தன்னுட்கொண்ட வஸ்துவை வெளியேறவொட்டாமல், பாதுகாக்கு மியல்பையுடையதோவென்னில்? ஒன்பான் வாயிலுடம்பு-ஒன்றிரண்டல்ல ஒன்பது துவாரங்களையுடைய சரீரமாம். இதில் ஸூக்ஷ்மமான ஆத்மா சேர்ந்திருத்தல் வியப்பன்றோ! சீதநீர் பொள்ளல் சிறுகுடத்து நில்லாது-ஓட்டைக் குடத்தில் தண்ணீர் தங்காது அதுபோல வீதலோ நிற்றலோ வியப்பு-இவ்வுயிர் சரீரத்திற் பொருந்தியிருப்பது வியப்பேயன்றி, இதைவிட்டுக் கடப்பது இயல்பேயாம் என்றவாறு.

உள்ளம்—நினைப்பதற்குரியதான மனசும், உரை-பேசுதற்குரிய தான வாக்கும், செயல்—வணங்குதற்குரியதான சரீரமும், உள்ள—பண்டே ஈசுவரனால் ஆக்கப்பட்டிருக்கிற, இம் மூன்றையும்—இந்த மூன்று கரணங்களையும், உள்ளி—இவை எதற்காக உண்டாக்கப் பட்டனவென ஆராய்ந்து, கெடுத்து-இதர விஷயங்களில் மண்டித் திரிவதைத் தவிர்த்து, இறையுள்ளில்—ஸர்வேசுவரன் விஷயத்தில் ஒடுங்கே—ஒடுக்குவாய் என்றவாறு. கரணங்களெல்லாம் ஸர்வேசுவரனை நினைப்பதற்கும், வாழ்த்துவதற்கும், வணங்குவதற்கும் உண்டாக்கப்பட்டனவாதலால் அவன் விஷயத்தில் இவற்றை உபயோகப்படுத்தவேண்டுமென்பது திரண்டபொருளாம்.

இதுவரையுங் கூறியவாற்றால், சரீரமானது நல்லபயனை யடைதற்கு முக்கிய சாதனமாயுள்ளதென்பதும், அச் சரீரத்தின் லக்ஷணம் இன்னதென்பதும், அதனோடுகூடிய ஆத்மாவின் லக்ஷணம் இன்னதென்பதும், ஒன்றுக்கொன்று விரோதமான சரீரத்தையும், ஆத்மாவையும், ஆத்மோஜ்ஜீவனார்த்தமாக ஸர்வேசுவரன் கிருபையாலே தன் அகடிதகடனா ஸாமர்த்தியத்தைக்கொண்டு ஒன்று சேர்த்து வைத்திருக்கின்றான் என்பதும், இப்படிப் பெறலரும் பேறாகப் பெற்றிருக்கிற தேகஸம்பத்தை வியர்த்தமாக்காமல், கிருதஜ்ஞதாபுத்திபூர்வகமாக பகவத்பாகவத கைங்கர்யத்தில் உபயோகப்படுத்தவேண்டுமென்பதும், இதுவே உடலெடுத்ததின் பயனும் என்பதும், உரைக்கப்பட்டன. ப. — அ.

ஆநகதுந்துபி.

வசுதேவருக்கு ஆநகதுந்துபியென்று பெயர். இவர் பிறந்த காலத்தில் ஆநகமென்கிற பேரி மிருதங்க முதலான வாத்தியங்களையும், துந்துபியென்னும் தேவ வாத்யத்தையும் தேவர்கள் ஆகாசத்தினின்றும் முழக்கினார்கள். ஆகையால் இவர்க்கு ஆநகதுந்துபியென்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் ஸ்வாயம்புமந்வந்தரத்தில் "ஸுதபா" என்ற ப்ரஜாபதியாகவும், இவருடைய பத்னியான தேவகி யென்பவள் "ப்ரச்நி" என்பவளாகவும் பிறந்தார்கள். இவ்விருவர்களையும் பிருஹ்மா பார்த்து நீங்கள் பிரஜைகளைச் சிருஷ்டிப்பீர்களாக என்று நியமித்தார். அந்நிய மனத்தைக் கொண்டு அதற்குத் தகுதியான சக்திகளைப் பெறுகைக்காக ஸ்ரீமந் நாராயணனைக் குறித்துச் செய்தற்கு அருமையான தபசைச் செய்தார்கள். இப்படித் தேவமானத்திற் பன்னீராயிரம் வருஷம் தபசு

செய்தபின்பு பகவான் பிரஸந்நமாகி உங்கட்டு வேண்டுமவற்றைக் கொடுக்கிறேன் கேளுங்களென்று அருளிச்செய்தார். இவர்கள் எங்கட்கு உன்னைப்போன்ற பிள்ளைவேண்டுமென்று கேட்கப் பகவானும் அப்படியே தந்தோமென்று வரமளித்து அந்தர்த்தானமாயினர். பின்பு இவர்கள் தபசில் நின்றும் விடுபட்டவர்களாய்க் குழந்தை பிறத்தலை நோக்கிக்கொண்டிருந்தார்கள் பகவான் தன்னோடொத்த மற்றொரு புருஷனைக் காணாமையால் தானே வந்து இவர்களுடைய கர்ப்பத்தில் "ப்ரசிநிசிகாப்பம்" என்ற பெயரையுடைய பிள்ளையாக அவதரித்தான். மறு ஜன்மத்தில் "ஸுதஸா" என்ற இவர் காசிபராகவும் அந்த "ப்ரசிநி" அதிதியாகவும் பிறந்தகாலத்தில் பகவான் இவர்கள் கர்ப்பத்தில் உபேந்திரனாக அவதரித்தான்.

மூன்றாவதான இப்பிறவியில் இவர் வசுதேவராகவும், அந்த அதிதி தேவகியாகவும், பிறந்து இருவரும் மணம்புரிந்து கொண்டார்கள். பின் இவளுடைய தமையனான கம்சன் இவர்களைத் தேரின்மீது வைத்துக்கொண்டு நகர்வலம் வருகிறகாலத்தில் இவளுடைய வயிற்றிற் பிறக்கப்போகிற எட்டாவதுபிள்ளை கம்சனைக் கொல்லும் என்று அசரீரி வாக்குண்டாயிற்று. இவள் ஜீவித்திருந்தாலன்றோ? இவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை நம்மைக் கொல்லும். ஆகையால் இவளை இப்போதே மாய்த்துவிட்டால் நம்மைக் கொல்வதெப்படி? என்று ஆலோசித்து வாளையுருவி இவளை வெட்டிவிட ஆரம்பித்தான். அப்பொழுது 'வசுதேவர் இவள் கர்ப்பத்திற் பிறக்கிற பிள்ளைகளைப் பிறந்தபொழுதே நீ கொன்றுவிடுவையாகில் உனக்கொரு பயமுமில்லையென்று அத்தருணத்திற்கேற்றபடி சிலவற்றைக்கூறித் தடுத்துவிட்டார். பின்பு கம்சன் இவர்களைச் சிறைச்சாலையி விட்டுவைத்து இவர்களுடைய கர்ப்பங்களையெல்லாம் அழித்துக்கொண்டு வந்தனன். இவ்வாறு ஆறு கர்ப்பங்கள் போனவாறே ஏழாவது கர்பபம் ஒருவர்க்குத் தெரியாமல் மாய்ந்துபோகப்பின் எட்டாவது கர்ப்பத்தில் ஸர்வேசுவரன் தான், கிருஷ்ணனா யவதரித்தான். அக் கிருஷ்ணனைக் கம்சனறியாதபடி வசுதேவர் நந்தகோகுலத்திற் கொண்டுபோய் மறைத்துவிட்டார். பின்னர் கம்ஸஹதமானவுடன் இவர் கிருஷ்ணனோடு சேர்ந்திருந்து அவனைப் புத்திரனாகவும் பரமாத்மாவாகவும் பாவனை பண்ணிக்கொண்டிருந்து அந்த ஜன்மத்திலேயே மோக்ஷமடைந்தார்.

மலர்ச்செல்வியாகிய ஸ்ரீதேவியோடு பகவான் நித்யவாஸம் புரிந்தருளுகிறான். அவனுடைய பாதாரவிந்தங்களில் அணியப்பெற்றுள்ள நூபுரங்களினின்று ஒரு மஹாநதி உத்பத்தியாகிறது. அதனால் அது எல்லா நதிகளிலும் ஏற்றமுடையது; மிகவும் பரிசுத்தமானது; தன்னிடத்தில் மூழ்கினவர்களுடைய ஸமஸ்த பாதகங்களையும் போக்கவல்லது. அனைவர்க்கும் அவரவர்களுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றுவிக்கும் ஆற்றலுடையது. அல்லாமலும் அது தன்னிடத்தில் படிந்த காற்று வீசுகின்ற ப்ரதேசங்களில் வசிப்பவர்களைப் பரம ஸாத்விகர்களாக்கி, விஷ்ணுபக்தியை அவர்கள் நெஞ்சில் தலையெடுக்கச் செய்கிறது. அவ்வாறானால் அந்த நதியை அணித்தாயுள்ள திவ்ய தேஸவாஸிகளுடைய பாக்யத்தை என்னென்று சொல்வது?

அத்தகைய பெருமைவாய்ந்த சிலம்பாறென்னும் நூபுரகங்கைக்குத் தெற்கே ஒருயோஜனை தூரத்திற்கப்பால் மிகவும் இனிமையான வாஸனை வீசுகின்ற கடம்பவனமென்று ஒரு க்ஷேத்ரம் உண்டு. அதனிடையே க்ருதமாலை யென்னும் புண்ணிய நதியொன்று பொருந்தியுள்ளது. அந்நதி தன் நீர்ப்பெருக்கால் எங்கும் வ்யாபித்து எல்லார்க்கும் எம்பெருமான் பக்கல் பக்தியை வளரச்செய்கிறது. தன்னை நினைத்தவர்களுக்கும் தரிசித்தவர்களுக்குங்கூட, அது இம்மையினும் மறுமையினும் இன்பமளிக்கும் இயல்புடையதாகின்றது.

அந்த க்ருதமாலா நதிக்குத் தெற்காக் அமராவதிக்கு நிகராகச் சொல்லத் தகுவதும், போகங்களுக்கும் புண்ணியங்கட்கும் புகலிடமாயிருப்பதும், சந்த்ரகுலத் தோன்றலாகிய புரூரவ சக்ரவர்த்தியினால் மனுநெறி வழுவாமல் செங்கோல் செலுத்தப்பெற்றதும், கூடலென்னும் திருநாமத்தைக்கொண்டு விளங்குவதுமான ஒரு திருப்பதியுண்டு. அங்கே எம்பெருமான் இனிதாக எழுந்தருளியிருக்கிறான்; என்று இவ்வகையாகப் பூர்வத்தில் எங்களுக்கு ஸங்க்ரஹமாகத் திருவாய் மலர்ந்தருளினீர். தேவரீரிடத்திற் கேட்டதே அதைப்பற்றி மேலும் விரிவாய்த் தெரிந்துகொள்ள ஆவலை யுண்டாக்குகின்றது. ஆகையால், ஓ தபோநிதியே! மஹாவிஷ்ணுவுக்குச் சமானமான க்ருபையுடையவரே! தேவரீருடைய திருவுள்ளத்திற் கிசைந்ததாகத் தோற்றினால், அவற்றையெல்லாம் அடியோங்கள் அறிந்துய்யுமாறு இப்போது ஸவிஸ்தாரமாகச்

சொல்லியருளவேண்டும். அன்றியும் அவ்வாறு அருளிச்செய்வ தற்குத் தேவரீரே யோக்யதையுள்ளவரென்பதையும் அடியோங்க ளறிந்துள்ளோம். என்று இவ்வண்ணமாகச் சௌனகர் முதலான ரிஷிகளெல்லாருங் கூடிப் பராசர புத்ரரான வ்யாஸரிடத்தில் மிகுந்த வினயத்தோடு வேண்டிக்கொண்டார்கள்.

வ்யாஸர் முனிவர்களுக்குக் கூறுதல்.

இந்தப்ரகாரமாக முனிவர்குழாங்கள் ஒன்றுசேர்ந்து ப்ரார்த் தித்துக் கொண்டதாகச் செவியேற்றிருந்த மஹரிஷியான வேதவ் யாஸர் ஸ்தல வைபவத்தை மனனம்பண்ணி, பிறகு பிராட்டிமண வாளனான எம்பெருமானுடைய தேனே மலருந் திருவடித்தாமரை களை மனஸ்விலே த்யானித்து, நிறைந்த கருணையோடு பின்வரு மாறு சொல்லத் தொடங்கினார்.

"ஓ முனிபுங்கவர்களே! உலகமுழுவதையும் புனிதமுடைய தாகச் செய்கின்ற உங்களால் விரும்பிக் கேட்கப்பட்ட, இந்த உத் தமமான விஷயத்தைக்குறித்து நான் அளவில்லாத ஆநந்தமடை கிறேன். மூன்றுலகங்களையும் இரண்டடியாலளந்த முகுந்தனுடைய ஸாந்நித்யம்பெற்றுவிளங்குகிற அந்த ஸ்தலத்தைத் தரிசித்துவாழ்த் தினவர்களுக்குக் கைவந்துதவாத பொருள் ஒன்றுமில்லை. அவ னுடைய புகழையே எப்பொழுதும் புகலக் கேட்டவர்களுக்கு ஸகல பாவங்களும் ஒழிந்து புண்ணியங்கள் யாவும் பொருந்துகின் றன. செந்தாமரை போலும் திருக்கண்களையுடையவரும், ஸ்ரீவத் ஸம் என்னும் மறுவைத் திருமார்பிலே தரித்தவருமான அவ ருடைய கல்யாண குணங்களை நினைக்குந்தோறும் என்மனம் உரு கிப் பரவசமாகின்றது.

தேனொழுகுகின்ற பரிமளமுள்ள திருத்துழாயை முடியிலே சூடிய ஸர்வலோக சரண்யனான ஸ்ரீமந் நாராயணனுடைய மதுரை ஸ்தலத்தின் மாஹாத்ம்யமானது தேவர்களாலும் முனிவர்களாலும் அளந்தறிய முடியாத பெருமையுடையதாகும். ஆதலால் எத் தனையோ கோடி ஆண்டுகளாக முயன்றாலும் அது என்னால் இயம் புந்தரத்தினதன்று. ஆயினும், சிறந்த குணங்களும் நிறைந்த ஞானமுமுடைய நீங்கள் என்னைப் பொருளாக மதித்து இவ் விஷ

யத்தைக்குறித்து வினவுகின்றீர்கள். அந்த சுகிர்தத்தினால் யான் என்னறிவாலியன்ற அளவு அதை உங்கட்கு எடுத்துரைக்கத் துணி கின்றேன்.

த்ருடமான வ்ரதத்தைக் கைக்கொண்டுள்ளவர்களே! எல்லா நன்மையும் எய்தப் பெற்றவர்களே! மிகவும் மேலானதான இவ் விஷயத்தை உங்களாலுசாவப்பட்டு நான் பாக்யசாலியானேன். நான்காம் வருணத்தவர் நான்மறை யோதுவதற்கு அதிகாரிகளாவ தில்லை; அதுபோலவே அச்சுதனடிக்கீழ் ஆளாகாதவர் இதனையும் அதிகரித்தலாகாது. மிகவும் மந்தணமாகப் போற்றத்தக்க இந்த வ்ருத்தாந்தத்தைத் தேவரிஷியான நாரதர் பக்கலிலே கேட்டு நான் உஜ்ஜீவிப்பதானேன். அந்த நாரதருக்கு நான்முகன் அருளிச் செய்தான். அந் நான்முகனுக்கு நாராயணன் உபதேசித்தான். இவ்வாறு இப் புராணம் பாரம்பர்யமாக இயம்பப் பெற்றதாகும். இதை விரும்பிக் கேட்டவர்கள் இருமைப்பயனும் எளிதிற் பெறு வார்கள். அல்லாமலும் அவர்கள் அந்தமிலின்பத் தழிவில்வீட் டையு மடைந்து ஆநந்தந் துய்ப்பவராவர்.

நாஸ்திகர்கள், அறிவினர்கள், கீழ்மக்கள், பாசண்டர், மற்றும் வேதபாஹ்யர், பாபயோனிகளாயுள்ளவர்கள் ஆகிய இவர்களோடு இதனைச் சொல்லுதல் கூடாது. ஆதலால் மஹா தபஸ்விகளே! ஒருநாளும் கோபமில்லாத ஐம்புலனடக்கிய அந்தணாளர்களான நீங்களே இதைக் குறிக்கொள்ளுதற்குத் தகுதியுடையவர்கள். விஷயாந்தரங்களிலேசிந்தையைச் செலுத்தாமல், மஹாவிஷ்ணுவை மனத்திலிருத்தி, அவனுடைய அனுக்ரஹத்தால் நாரதர் எனக்கு நவின்றருளியபடியே நான் உங்களுக்கு விளங்க உரைக்கிறேன். நீங்களும் அவ்வாறே இந்திரியங்களெல்லாவற்றையும் ஒருவழிப் படுத்துங்கள். மதுரையின் மான்மியத்தைக் கேட்பதே கருத் தாகக்கொண்டு சாவதானமாக இருப்பீர்களாக;'' என்று இவ்வாறு அந்தச் சௌனகாதி முனிவர்களுக்கு இனிமையாக இசைத் தருளிப் பின் வ்யாஸமுனிவர் கூடல் மான்மியத்தைக் கூறத் தொடங்கினார்.

ஈசன் தவம் புரிதல்.

மன்னுமனோஹரமானகதம்பவனஞ்சூழ
இன்னறைகாலதர்புன்னை சுரும்பிருந்தூதப்
புன்னைமலர்ந்துமணங்கமழ்தாதொடுபொன்வீசப்
பின்னியகூந்தற்கமுகிடைதோகைப்பெடையாட,

குருகையின்மாறற்காமிதெனும்படிகுளிர்தென்றல்
வருவதுபோவதுவாடைமணந்தருமகிழோங்க
முருகலர்பிண்டியுமாவுமிதொன்றெனுமுறைதுன்ன
அருகுயர்சண்பகம்வேள்கிலைநாணுமம்பீன,

மல்லிகைமுல்லைகள்மாலதிமேலதிமதுரஞ்சேர்
சொல்லியலார்தொடுகைம்மலர்மீதுந்துளிதூவப்
புல்லியஆடவர்புன்னகைசெய்வதுபோலெண்ணி
மெல்லியலார்நகமுகைவிரிகேதகைவெறியாட.

"வானத்தையளாவி வளர்ந்த தருக்களால் நிறைந்து காண்போரது உள்ளமும் கண்களும் ஒருங்கு கவரும் வனப்புவாய்ந்து விளங்குகிற கடம்பவனத்தில், இனிமையான வாஸனைபொருந்திய புஷ்பங்களில் தேனினங்கள் கூட்டங் கூட்டமாய் மதுவையுண்டு களிக்கின்றன. புன்னைமரத்தில் புஷ்பங்கள் மலர்ந்து இதழை உதிர்த்தலான் அச் சோலையின் எம்மருங்கும் பொன்னுரைத்தாற்போல விளங்குகிறது. ஒன்ரோடொன்று நெருங்கிக் கலந்துள்ள கமுகவ்ருக்ஷங்களி னிடையிடையே மயிற்பேடுகள் தமது கோலக் கலாபங்களை விரித்துக் குதூஹலமாய் விளையாடுகின்றன. மிகவும் குளிர்ந்த இளந்தென்றற் காற்றும் வாடைக்காற்றும் மாறிமாறி வீசும்போதெல்லாம் ஸ்ரீவகுளாபரணரான குருகூர்ச் சடகோபருக்கு யோக்யமானவையென்று சொல்லுமாறுள்ள மகிழம்பூக்கள் மணங்கமழுகின்றன. ஒருசார் முகிழ்களோடுகூடிய பிண்டியும், மாவும், சண்பகமும் நிறைந்து புஷ்பித்தலால் கண்களுக்கு நல்ல காட்சியை யளிக்கின்றன. மல்லிகையும், முல்லையும், மாலதியும் முதலான புஷ்பச்செடி வகைகளெல்லாம் எல்லாவிடங்களிலும் பரிமளமான சுகந்தத்தைப் பரவச் செய்கின்றன. மற்றொரு பக்கத்தில் தாழைகள் தமது வெள்ளிய மடல்களை விரித்து நறுமணங்கமழ்ந்து சோலையை அலங்கரிக்கின்றன,

இவ்வாறு பலவகைகளாலும் சிருங்காரமுடையதான அக் கடம்பாடவியினூடே வையைநதி பாயப்பெற்ற வளத்தையுடைய விசாலமான ஓர் இடமுண்டு. அதிற் சிற்பசாஸ்திர முறையிற் சிறிதும் வழுவாமல் விச்வகர்மாவினால் நிர்மிதமான விமானமொன்று எட்டு அங்கங்களோடும் எழில்பெற அமைந்து மனத்திற்கினிய மாட்சியுடையதாய்த் திகழ்கின்றது. அவ் விமானத்திற் பெருமாளும் பிராட்டியும் பிரியாது வதிகின்றனர். பண்டொரு காலத்தில் சனத்குமாரனால் அர்ச்சித்து ஆராதிக்கப்படுபவனாக, அவன் பிரார்த்தனைக்கிரங்கி எழுந்தருளி, தேவதேவனான திருமால் அந்த விமானத்திலே வீற்றிருப்பவனாயினான்; என்று இவ் விஷயங்கள் யாவும் முன்னரே உங்களுக்குத் தெளிய உணர்த்தியுள்ளேன்; ஆயினும் நீங்கள் இப்பொழுது அதனை மேலுங்கேட்க அர்வமுடையவர்களாயிருக்கிறீர்கள். ஆதலால் அதை உங்கட்கு விரிவாயுரைக்கின்றேன், கேட்பீர்களாக;'' என்று இத்துணையும் முன்னுரையாக மொழிந்து அந்த ப்ராஹ்மணோத்தமர்களான முனிவர்களை நோக்கிப் பின்வருமாறு வ்யாஸர் விரிவாய் வெளியிடுவதானார்.

இடபமால்வரைதொட்டெழிற்குமரியாற்றளவும்
வடதுதெற்கெனும்எல்லையாய்மலயமால்வரையே
குடதிசைப்படக்குணகடல்சாறுமாறக்கூறும்
புடவிபாண்டியராண்டுளநாடெனப்புகல்வார்.

"வடக்கே திருமாலிருஞ் சோலைமலையும், தெற்கே கன்யாகுமரியும், மேற்கே மலய பர்வதமும், கிழக்கே ஸமுத்ரமும் எல்லையாக இடைப்பட்ட பூமி முழுவதும் பாண்டிய அரசர்களுடைய ஆட்சிக்குட்பட்டதாகும். அந்தப் பாண்டியனுடைஸ்வர்க்க லோகத்தை வாஸஸ்தானமாகப்பெற்ற தேவர்களாலும் விரும்பப்படும் சீர்மையுடையது. அந்த தேசத்தில் தூய்மையுடைய புண்ணியஸ்தலங்களும், ஸ்வயம்புவாய்த் தோன்றிப் பரமபாவனமான தீர்த்தங்களும் பற்பலவுள்ளன. அந்தஸ்தலங்கள் ஒவ்வொன்றிலும் மஹரிஷிகளான பலர் மஹாவிஷ்ணுவை அன்புடன் வழிபட்டு உயர்ந்த பதவியை அடைந்தார்கள்.

அந்த திவ்ய தேசங்களிலெல்லாம் கடம்பவனம் சிறந்தது. அதனுள்ளும் அஷ்டாங்க விமானத்திலே எம்பெருமானுடைய ஸாந்நித்யம்பெற்று ஸர்வாபீஷ்ட பலப்ரதமாய்த் தருமந் தழைத்தோங்குமாறு விளங்குவது கூடல் என்னும் மதுரா நகரமாகும்.

அந்த அஷ்டாங்க விமானத்தின் கிழ்பால் திசையில் அமேய மான ப்ரபாவத்தோடுகூடிய ஸ்வர்ண புஷ்கரணி யென்னும் தடாகம் ஒன்றுண்டு. அது தன் தீர்த்த விசேஷத்தால் யாவராலும் புகழப்படுவது. அத் தடாகத்தின் மேற்கே தேவதேவனுன ருத்ரன் ஓர் அரிய பெரிய தவம்புரியலாயினுன். அதனுல் உலகமுழுவதும் அஞ்சி நடுங்கிற்று. அப்போது வடவா முகாக்னிக்குச் சமானமான தூமகேது அவன் ஜடையினின்றும் மேல்நோக்கி யெழுந்து மிகவும் உக்ரமாக ஓங்கி வளர்ந்து கொழுந்துவிட் டெரிந்தது. அது தேவர்களோடு த்ரிலோகங்களையும் தஹித்து பஸ்மீகாமாக்கத் தொடங்குவதுபோல் தோன்றிற்று. அதனைக்கண்ட தேவர்களெல்லாம் திடுக்கிட்டார்கள்; பாகசாதனனும் பதைபதைத்தனன். பிறகு அவர்கள் ஒருவாறு பயந்தெளிந்து ஸகஸ்ரதள பத்மத்தை ஆலயமாகக்கொண்ட ப்ரஹ்மதேவனுடைய ஸத்ய லோகத்தை மிகவும் விரைவாகச் சென்றடைந்தார்கள்.

அவ்வாறடைந்தவர்கள் அந்த ப்ரஹ்மாவினுடைய சரணங்களில் வீழ்ந்து அடைக்கலங் கூறினுர்கள். பிறகு அவர்கள் எழுந்திருந்து சிரஸ்ஸின்மேலே கைகளைக்குவித்து, தலை வணக்கத்தோடு தாழ்ந்து, 'ஆதியாயுள்ள தேவனே! ஜகத்ஸ்ருஷ்டிக்குக் காரணபூதனுனவனே! அகில புவனங்களையும் அழியாமற் காப்பவனே! விரிஞ்சனே! கேட்டருளவேண்டும்; நாங்களெல்லோரும் காரணமில்லாமலே பயத்தினுற் பீடிக்கப்பட்டவர்களானேம்; அதனுல் வந்து நின்னைச் சரண்புகுந்தோம்;' என்று சொல்லி முறையிட்டார்கள். அதுகேட்ட நான்முகன், அச்சத்தால் அறிவுகலங்கிய அமரரை நோக்கி, 'அகலாததான இவ் வச்சம் உம்பர்களான உமக்கு எவ்வாறு போந்தது'? என்று வினவினுன். அதற்கு, இமையவரெல்லாருங் கூடி,' மிகவும் தீனர்களாகிய எங்களால் ஒரு காரணமும் உணரலாவதில்லை; ஆயினும் பெரிதும் பயமுண்டாகின்றது; அதனைத் தவிர்த்தற்குரியார் உன்னையல்லால் ஒருவருமில்லை; அன்றியும் நிகழ்ந்தவையனைத்தும் நீயே அறிவை; ஆதலால் எவ்வாற்றானும் இப் பெரிய இடரினின்றும் எங்களைக் கரையேற்றுதல் இறைவனுகிய உனக்கே இயைந்த கடமையாயிற்று;' என்று இவ்வண்ணமாக மறுமொழி புகன்று ப்ரார்த்தித்துக் கொண்டார்கள்.

அப்பொழுது, ஸ்ரீய: பதியான ஸர்வேசுவரனுடைய திரு நாபீ கமலத்தினின்று திவ்ய கந்தத்தோடு இதழ்களை விரித்துத் தோன்றிய தாமரைத்தவிசில் உத்பவித்தவனான சதுர்முகனும், தேவர்கள்பக்கல் நிறைந்த கருணையுடையவனாகி, அவர்கள் தன்னைப் புடைசூழ்ந்துவரப் பணித்துத் தான் பாற்கடலை நோக்கிப் புறப்பட்டான். அவ்வாறே அவர்களனைவரும் க்ஷீராப்தியைச் சென்றெய்தினார்கள்.

பாய்திரைசுருட்டும்பாற்கடல்முகட்டிற்
பஃறலைப்பாந்தள்மெல்லணைமேல்
ஆய்துயில்புரிந்திவ்வுலகுயிரோம்பும்
அன்பிலேசிந்தைசென்றடியார்
நோய்தனைக்களைந்துவிபுவெனத்தோன்றி
நொடிதனிற்படைத்தளித்தழித்துத்
தோய்தருமாதிகாரணக்கடவுள்
துணையடிபணிந்தனர்துதித்தார்.

தேவர்கள்தேவேபழிச்சுவோர்துயரம்
தீர்ப்பவசெகத்தினுக்கிறைவ
யாவர்கள்தமக்கும்மேலவவானோர்
யாவரும்நின்சரணடைந்தேம்
காவலாய்உன்றாற்புரந்திடற்குரியேம்
பயமெனுங்கடலினின்றெடுத்தெம்
ஆவிநீயருளல்வேண்டுமென்றுரைத்தார்
அரியுமவ்வாய்மைகேட்டுணர்ந்தான்.

அவ்விடத்தில், ஆதிகாரணனும், ஆசிரித ரக்ஷணத்திலே நோக்குடையவனும், ஆயிரம் பணாமுடிகளையுடைய அநந்தலயனத்தின்மீது அறிதுயி லமர்ந்தருளுபவனுமான ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளில் தெண்டனிட்டு, 'தேவாதிதேவனே! அடியார்களுடைய அநிஷ்டங்களை நிரவிப்பவனே! ஜெகத்பதியே! புருஷோத்தமனே!' என்று பலவாறாக ஸ்தோத்ரம் செய்து பின்னர், 'வானவர்களாகிய யாங்களனைவரும் உன்னிடத்தில் சரணாகதி பண்ணினோம்; அதனால் ஸர்வரக்ஷகனான உன்னால் இப்பொழுது

பாதுகாத்தற்குரியவர்களானேம்; ஆகையால் பயமென்னும் பெரிய ஸாகரத்தினின்றும் எங்களை எடுத்து உயிர்ப்பிச்சை யளித்தருள வேண்டும்;' என்று கூறித் தங்கள் குறையைத் தவிர்த்தருளுமாறு வேண்டி நின்றார்கள்.

இவ்வாறு பிரமனும் இந்திரனும் முதலான இமையவர்கள் ஒன்றுகூடி உரைத்ததை மனத்துட் கொண்ட எம்பெருமான், தன் கருணைபொழிகின்ற கண்ணிணைகளால் அவர்களைக் குளிர நோக்கி, மிகுந்த அன்பைப் புலப்படுத்துவனவாய் அமிர்தத்துக் கொப்பான இனிய வசனங்களால், 'இன்று உமக்கு யாது பொருட்டினால் நடுக்கம் எய்தியது இயம்புமின்' என்று கெம்பீரமாகக் கேட்டருளினான். அதற்கு மறுமொழியாக, 'உன்னுடைய மாயையால் மதிமருண்ட யாங்கள் யாதொன்றும் உணர்கிலோம்; உன்னை யொப்பாரும் மிக்காருமின்றி உலகுக்கெல்லாம் முழுமுதற் கடவுள் நீயேயாதலால் உனக்குப் புலனாகாத பொருள் ஒன்றுமில்லை; உன்னுடைய திருவடிநீழலில் ஒதுங்கி உயிர்வாழ்தல் வேண்டிய எங்களை இத்தருணம் புரந்தருளுவாயாக;' என்று திசைமுகன் இசைத்தான். அதுகேட்டு, எல்லாவுயிர்கட்கும் ஹிதத்தையே நாடுபவனும், அருளே உருவமாக உடையவனுமான பகவான் ஈரமளைந்த இன்சொற்களாற் பின்வருமாறு பேசலுற்றான்.

'எம்மை வந்தணுகிய இமையவர் குழாங்களே! யாம் நிகழ்ந்ததை யறிந்தோம். இனி நீவிர் மனக்கவலையை மாற்றுவீராக. நும்மைப்பற்றி வருத்துகின்ற துயரம் ஏற்றதோ ருபாயத்தினால் எம்மாற் பரிகரிக்கற்பாலது. தெக்ஷிணபூமியிற் செந்தமிழ் வளத்தாற் சிறப்புற்று விளங்காநின்ற பாண்டியனாடென்றொரு தேசமுளது. அத் தெய்வத் திருநாட்டின்கண், கரையின்மீது திரையெறிகின்ற வையையென்னும் வளநதியின் சமீபமாக, வாமதேவ மஹாதேவனென்னும் பெயர்படைத்த பெரியோன் தவம்புரிகின்றான்

அவன் பர்வதராஜன் புத்திரியான அம்பிகையினிடத்தில் அகலாத காதல்கொண்டவன். அதனால் அவன் அநங்கன்வாளிக் கிலக்காய் அருந்துயர்பொறுக்கும் ஆற்றலில்லாதவனானான். உலேபிலிட்ட